පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය - **79**

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය බදුල්ල

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் - 79

மாவட்ட செயலகம் - பதுளை

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் நிறுவன பொறுப்பு கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary Series No – 79

District Secretariat – Badulla

Submission of observation of Hon. Minister in charge of the institutions and steps taken with regards to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No.119 (4)

மாதிரி 01

<u>இலங்கை பாராளுமன்ற அரச கணக்குகள்தொடர்பான குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட நிலையியற் கட்டளை 119 (4) தொடர்பான அவதானிப்புகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை பாராளுமன்றத்துக்கு முன்வைத்தல்.</u>

பாராளுமன்ற வெளியீட்டு இல : 79

நிறுவனத்தின் பெயர் - மாவட்டசெயலகம், பதுளை.

அ.க குழுவினால் கட்டிக்காட்டப்பட்ட குறைகள் மற்றும் வழிகாட்டல்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தற்போதைய முன்னேற்றம்
வைப்புப்பதிவேடு இற்றைப்படுத்தி நடாத்திச் செல்லாமை	பிணை வைப்பு செய்யாத அனைத்து உத்தியோகத்தர்களினதும் பிணை வைப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, வைப்புப்பதிவேட்டை இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
வாகனங்களை பட்டியல் படுத்தும் பதிவேடு உரிய முறையில் இற்றைப்படுத்தி நடாத்திச் செல்லப்படாமை	வாகனங்களை பட்டியல் படுத்தும் பதிவேட்டை உரிய முறையில் இற்றைப்படுத்தி நடாத்தி செல்லநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
நிலையான சொத்து பதிவேடு இற்றைப்படுத்தி நடாத்திச் செல்லப்படாமை	நிலையான சொத்து பதிவேடு இற்றைப்படுத்தி நடாத்தி செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
அனுமதியற்ற கைப்பற்றல்கள் தொடர்பான பதிவேடு இற்றைப்படுத்தி நடாத்திச் செல்லப்படாமை	அனுமதியற்ற கைப்பற்றல்கள் தொடர்பான பதிவேட்டை இற்றைப்படுத்தி நடாத்தி செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
நீண்டகால அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் பதிவேடு இற்றைப்படுத்தி நடாத்தி செல்லப்படாமை	நீண்டகால அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் பதிவேட்டை இற்றைப்படுத்தி நடாத்தி செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது
செலவு பயன்பாட்டு பதிவேடு இற்றைப்படுத்தி நடாத்திச் செல்லப்படாமை	செலவு பயன்பாட்டு பதிவேட்டை இற்றைப்படுத்தி நடாத்தி செல்வதற்கு உரிய அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.
ஆபத்து பதிவேடு இற்றைப்படுத்தி நடாத்திச் செல்லப்படாமை	ஆபத்து பதிவேடு இற்றைப்படுத்தி நடாத்தி செல்லப்படுகின்றது.
2004.05.11 ஆம் திகதி 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம் அரச சம்பளம் தயாரிக்கும் கணணி மென்பொருளுக்குரிய கடவுச்சொல்மூன்று மாதத்திற்கொரு முறை மாற்றம் செய்யாமை	அரச கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம் அரச சம்பளம் தயாரிக்கும் கணணி மென்பொருளுக்குரிய கடவுச்சொல்லைமூன்று மாதத்திற்கொரு முறை மாற்றம் செய்யுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளேன்.

உள்ளகக்கணக்காய்வு வினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதிலளிக்காமை தொடர்பான சந்தர்ப்பங்கள் அறிய கிடைக்கப்பெற்றுள்ளமை	தாமதத்தை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் , கணக்காய்வு வினாக்களுக்கான பதில்களைஉரிய திகதிக்கு சரியாக பெற்றுக்கொடுப்பதற்கு அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.தற்போது உரிய நேரத்திற்குள் பதிலளிக்க நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள்ளது.
நி.பி 134(2) பிரகாரம் கணக்காய்வு தலைமை அதிபதியிடம் கேட்டு, உள்ளக கணக்காய்வு வேலைத்திட்டத்தை வருட ஆரம்பத்திலேயே தயாரிக்காமை	நி.பி 134(2) பிரகாரம் உள்ளகக்கணக்காய்வு வேலைத்திட்டங்கள் வருட ஆரம்பத்திலே தயாரிக்கப்படுகின்றது.
மாவட்ட செயலகத்தின் கீழுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் கணக்காய்வு குழு குறைந்த பட்ச அளவிலாவது கூட்டப்பட்டிருக்காமை	மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் கணக்காய்வு குழு உரிய முறையில் நடாத்தப்பட்டிருத்தல்.
2017.06.26 ஆம் திகதி 01/2017 இலக்க சொத்து முகாமைத்துவசுற்றறிக்கையின் 7 பந்தியின் பிரகாரம் 2018 வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்து மற்றும் பாவனையிலிருந்து நீக்குதல் போன்ற தகவல்கள் கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு முன்வைக்கப்படாமை.	எதிர்காலத்தில் நிவர்த்திசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
2020.08.28 ஆம் திகதி01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் Iபிரிவின்II.Iபந்தியின் கால அட்டவணைக்குள் நி.பி 756 (6) பிரகாரம் சுற்றாய்வு சபையை நடாத்தி உரிய திகதியில் உரிய அறிக்கையை கணக்காய்வு தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்காமை.	நி.பி 756(6) பிரகாரம் பொருட் சுற்றாய்வு நடவடிக்கைகள் மேற்கொண்டு உரிய காலத்திற்குள் தேவையான அறிக்கைகளை கணக்காய்வு தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதுடன், தற்போது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.
வருடாந்த இருப்புப்பொருட் சுற்றாய்வு சபையில் வெளிப்படுத்தப்பட்ட மேலதிகம், குறைவு தொடர்பான பரிந்துரை மற்றும் ஏனைய பரிந்துரைகள் உரிய காலத்திற்குள் நடைமுறைப்படுத்தாமை	2023 ஆம் ஆண்டிலிருந்து மேலதிகம், குறைவு சரியாக இனங்கண்டு , பரிந்துரைகள் உரிய காலத்திற்குள் நடைமுறைபடுத்த தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
அனைத்து வாகனங்களினதும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் இல்லாமை	மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான வாகனங்களின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் உண்டு.
அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை பொறிக்கப்படாமை	அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை பொறிப்பதற்குநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
பழுதடைந்த வாகனமொன்றை 08 மாத குறைந்த காலத்திற்குள் பாவனையிலிருந்து அகற்றாமை	தற்போது 250-2069 மற்றும், 250-2075 இலக்கம் கொண்ட கெப் வாகனங்களை பாவனையிலிருந்து அகற்றும் நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளதோடு , இன்னும் 02 வாகனங்களை பாவனையிலிருந்து அகற்றும்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
அரச வாகனங்கள் விபத்து தொடர்பாக நி.பி பிரகாரம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை	அரச வாகனங்கள் விபத்து தொடர்பாக நி.பி பிரகாரம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு உத்தியோகத்தர்களுக்கு தேவையான அறிவுரை வழங்கப்பட்டுள்ளதுடன், தற்போது அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வங்கி கணக்கிணக்கக் கூற்று உரிய திகதியில் தயாரித்து அத்தாட்சிப்படுத்தி கணக்காய்வுக்கு முன்வைக்காமை	வங்கி கணக்கிணக்கக் கூற்று உரிய திகதியில் தயாரித்து முன்வைக்க உத்தியோகத்தர்களுக்கு தேவையான அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் 2024 ஆம் ஆண்டிலிருந்து உரிய திகதிக்கு வங்கி கணக்கிணக்கக் கூற்றை அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
ஒரு வருடத்திற்கும் மேலாக காணப்படுகின்ற வரவேண்டிய கடன் மீதி	இக்கடன் தொகையில் மாகாண உத்தியோகத்தர்கள் செலுத்த வேண்டியது தொடர்பாக மாகாண சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஏனைய கடன் மீதிகளை தீர்ப்பது தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களுக்கு தேவையான அறிவுரை வழங்கப்பட்டது. இதுவரை 2022 ம் ஆண்டில் காணப்பட்ட கடன் தொகையில் ரூ. 1,246,154.00 தொகை தீர்க்கப்பட்டுள்ளது. மீதித் ரூ. 420,285.57 தொகையையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
பொது வைப்புகணக்கில் காலாவதியாகியுள்ள வைப்புகள் தொடர்பாக நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை	பொது வைப்புகணக்கில் காலாவதியாகியுள்ள வைப்புகள் தொடர்பாக நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள தேவையான அறிவுரை வழங்கப்பட்டது. இதுவரை 2022 ம் ஆண்டில் பொது வைப்புகணக்கில் காணப்பட்ட மீதியில் ரூ. 2,422,845.27 தொகை தீர்க்கப்பட்டுள்ளது. ரூ. 2,769,213.79 மீதித் தொகையையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.
நி.பி 371 பிரகாரம் சிறு கட்டு நிதி , பணிகள் முடிவடைந்து 10 நாட்களுக்குள் தீர்வை செய்யப்படாமை	எதிர்வரும் காலங்களில் நி.பி 371 பிரகாரம் சிறு கட்டு நிதி ,பணிகள் முடிவடைந்து 10 நாட்களுக்குள் தீர்வை செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்வேன்.
ஏனைய கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்காக அறவிட்ட வருமானத்தை உரிய காலத்திற்குள்உரிய நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்காமை	ஏனைய கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்காக அறவிட்ட வருமானத்தை உரிய காலத்திற்குள்உரிய நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்கின்றேன்.
மாதாந்தம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தை கூட்டாமை	ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தாலும், பல்வேறு பிரச்சினைகள் காரணமாக அதாவது தலைவர்களிடமிருந்து திகதி பெற்றுக்கொள்ள முடியாமை மற்றும் உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக உரிய திகதியில் கூட்டத்தை நடாத்த முடியவில்லை என்பதை ஏற்றுக்கொள்வதோடு, எதிர்வரும் காலங்களில் மாதாந்த கூட்டத்தை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றேன்.
மாவட்ட செயலாளரினால் கூட்டப்படுகின்ற பிரதேச செயலாளர்களின் கூட்டத்தை மாதாந்தம் கூட்டாமை	சுற்றறிக்கை பிரகாரம் மாதாந்தம் பிரதேச செயலாளர்களின் கூட்டத்தை மாதாந்தம் கூட்ட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். எவ்வாறாயினும் , தற்போது வரை பிரதேச செயலாளர்களை தெளிவுப்படுத்தல் , முன்னேற்ற மீளாய்வு கலந்துரையாடலுக்கான சுற்றாடல் குழுக்கூட்டம் , விவசாயக் குழுக்கூட்டம் போன்றவற்றை நடாத்துவதற்கு சுகாதார வழிகாட்டல்களின் பிரகாரம் பல்வேறு வரையறைகளின் கீழ் நடாத்தப்பட்டது.மேலும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு மற்றும் கணக்காய்வு முகாமைத்துவ குழு கூட்டங்களின் போது ,தேவையான ஆலோசனைகளை பெற்றுக்கொடுத்தல் , விசாரணை மற்றும் முன்னேற்ற மீளாய்வை நடாத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.அவ்வாறிருக்கையில் அரச நிதியை செலவு செய்து, ஒரே காரணத்திற்காக மீண்டும் மீண்டும் நேரத்தை செலவு செய்து கூட்டங்களை கூட்டா

	விட்டாலும் , நிகழ்நிலை மூலமாக தெளிவுப்படுத்தல், முன்னேற்ற மீளாய்வு மற்றும் விசேட கலந்துரையாடல்களை நடாத்துதல் தடைகள் இன்றி மேற்கொள்ளப்படுகின்றன என்பதை குறிப்பிடுகின்றேன்.
மாவட்ட வீடமைப்பு குழுக்கூட்டத்தை மாதாந்தம் கூட்டாமை	மாவட்ட வீடமைப்பு குழுக்கூட்டம் , தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மூலம் ஏற்பாடு செய்யப்படுவதோடு, அக்கூட்டத்திற்காக பிரதேச செயலாளர்களுக்கு மாத்திரம் அழைப்பு விடுக்கப்படுகின்றது.
மாவட்ட உர ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தை மாதாந்தம் கூட்டாமை	மாவட்ட உர ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தை மாதாந்தம் நடாத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் போதுமானதாக இல்லாமையாலும் , பிரதேச கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மாதாந்த முன்னேற்ற மீளாய்வு குழுக்கூட்டம் நடாத்தப்படுவதால் , அதில் உரிய தெளிவுப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுவதாலும் , மாதாந்தம் குழுக்கூட்டத்தை நடாத்துவதற்கு தேவை இல்லை என்பதை குறிப்பிடுகின்றேன்.
மாவட்ட விலை நிர்ணயித்தல் தொடர்பான குழுக்கூட்டத்தை மாதாந்தம் கூட்டாமை	வழக்கமாக 2022 வருட ஆரம்ப காலப்பகுதிக்குரிய 2021.12.29 ஆம் திகதியன்று மாவட்ட விலை நிர்ணயித்தல் குழுக்கூட்டத்தை நடாத்தா விட்டாலும், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரது HA/ED/District Projects மற்றும் 2022.03.01 ஆம் திகதி கடிதம் மூலமாக அப்போதைக்கு அவசரமாக கட்டிடப்பொருட்கள் விலைகள் மற்றும் போக்குவரத்து விலைகள் அதிகரித்தமையால் , மாதாந்த விலை குழுக்கூட்டத்தை கூட்டுமாறு அறிவுரை வழங்கப்பட்டது. அதன்படி , 2022 ஆம் ஆண்டின் ஏப்ரல் ,மே மற்றும் ஜூன் மாதங்களுக்கான மாவட்ட விலை நிர்ணயித்தல் தொடர்பான குழு கூட்டப்பட்டுள்ளது என்பதை தெரிவிக்கின்றேன்.மேலும் 2022 ஜூன் மாதத்தின் பின்பு கட்டிடப்பொருட்கள் மற்றும் போக்குவரத்து விலைகளில் அதிகப்படியாக மாற்றம் அடையாததன் காரணமாக , மற்றும் BSR ஆவணம் 06 மாதத்திற்கொரு முறைதயாரிக்கப்படுவதால் ,அதற்கு தகுந்தாற் போல் வழமையாக 06 மாதத்திற்கொரு முறை விலை குழுக்கூட்டம் கூட்டப்பட்டது.
அலுவலக இணையத்தளத்தில் பொது மக்களின் குறை மற்றும் பாராட்டுகளை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்காமை	பொது மக்களின் குறை மற்றும் பாராட்டுகளை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அருணோதய என்ற பெயரில் வேலைத்திட்டமொன்று தற்போது மாவட்ட செயலக உத்தியோகப்பூர்வ இணையத்தளத்தின் ஊடாக செயற்படுத்தப்படுகின்றது என்பதை குறிப்பிடுகின்றேன்.
2018.01.24 ஆம் திகதி , 05/2018 (1) ஆம் இலக்க சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட 2008.02.06 ஆம் திகதி 5/2008 இலக்க பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினது சுற்றறிக்கையின் பிரகாரம் பிரஜைகள் / சேவை பெறுநர் பட்டயம் உரிய முறையில் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்காமை	பிரஜைகள் பட்டயத்தை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
தயாரிக்கப்பட்ட ஆளணியினர் திட்டம் மூலமாக ஒரு உத்தியோகத்தருக்கு குறைந்த பட்சம் வருடத்திற்கு 12 மணித்தியாலம் மேலதிக பயிற்சியொன்றை ஏற்பாடு செய்யாமை	இல BD/GN/130/18/2022மற்றும் 2022.06.03 திகதிய அரச செலவுகளை கட்டுப்படுத்துதல் தொடர்பான கடிதத்திற்கு அமைவாக , செலவுகளை கட்டுப்படுத்த வேண்டுமென்பதால்,

	பயிற்சி வேலைத்திட்ட ஆளணியினர் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளதன் படி மேற்கொள்ள முடியாமல் போனது. எனினும் தற்போதைக்கு ஆளணியினர் திட்டத்தின் படி பயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்தி செல்லப்படுகின்றது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.
முழு அலுவலக உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய செயற்றின் உடன்படிக்கை ஒன்றை தயாரித்து ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளாமை	முழு அலுவலக உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய செயற்றின் உடன்படிக்கை ஒன்றை தயாரித்து ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
அலுவலகத்தின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியற்ற நிலையிலோ அல்லது பாதகமான நிலையில் உள்ளது.	நிதிக்கூற்றுகள் வாயிலாக உண்மை மற்றும் நியாயமான நிலைமையை வெளிக்கொணர்வதற்கான கணக்காய்வு அபிப்பிராயமொன்றை பெற்றுக்கொள்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு தேவையான அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. 2022 மற்றும் 2023 வருடங்களில் முனைப்பழியுள்ள அபிப்பிராயமொன்று பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.
மதிப்பீட்டு வருடத்தின் செயற்திறன் இலக்கு உரிய திகதிக்கு முன்வைக்கப்படாமை	எதிர்வரும் காலங்களில் செயற்திறன் இலக்குகளை உரிய திகதிக்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றேன்.
மாவட்ட மற்றும் பிரதேச போதைப்பொருள் நிவாரண குழுக் கூட்டத்தை காலாண்டுக்கொரு முறையாவது கூட்டப்படாமை.	மாவட்ட மற்றும் பிரதேச போதைப்பொருள் நிவாரண குழுக் கூட்டத்தை காலாண்டுக்கொரு முறையாவது கூட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றேன்.
2005ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை பேரழிவு முகாமைத்துவ குழுக்கூட்டத்தை நடாத்தாமை	2005ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை பேரழிவு முகாமைத்துவ குழுக்கூட்டத்தை நடாத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்கின்றேன்.
திட்டமிடப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொடுக்கப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களின் அளவு 50% ற்கு குறைந்த மட்டத்தில் காணப்படல்	இல BD/GN/130/18/2022மற்றும் 2022.06.03 திகதிய அரச செலவுகளை கட்டுப்படுத்துதல் தொடர்பான கடிதத்திற்கு அமைவாக , செலவுகளை கட்டுப்படுத்த வேண்டுமென்பதால், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மனிதவள திட்டத்தில் குறிப்பிட்டுள்ளதன் படி மேற்கொள்ள முடியாமல் போனது. எனினும் தற்போதைக்கு மனிதவள திட்டத்தின் படி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி செல்லப்படும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்தமை	கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்கின்றேன்.
அனைத்து உத்தியோகத்தர்களினதும் சொத்து பொறுப்பு விபரங்களை வெளிப்படுத்தாமை	இது தொடர்பாக அனைத்து உத்தியோகத்தர்களையும் தெளிவுப்படுத்தி சொத்து பொறுப்பு விபரங்களை வெளிப்படுத்தும் அறிக்கையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
உச்ச பட்ச சேவை காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்கு உரிய முறையில் இடமாற்றம் பெற்றுச்செல்ல நடவடிக்கை மேற்கொள்ளாமை	05 வருடத்திற்கு மேற்பட்ட அலுவலக உத்தியோகத்தர்களுக்கு வருடாந்த இடமாற்றம் செயற்படுத்தப்பட்டதோடு, பிரதேச மற்றும் மாவட்ட வருடாந்த இடமாற்றம் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதை குறிப்பிடுகின்றேன்.

மாவட்ட சுற்றாடல் குழு குறைந்த பட்சம் மாதத்திற்கொரு முறையாவது கூட்டப்படாமை	02	2022 மே மாதத்திலிருந்து 2022 செப்தெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்குள் சுற்றாடல் குழு கலந்துரையாடலுக்காக பிரச்சனைகள் முன்வைக்கப்படாததன் காரணமாக சுற்றாடல் குழு கூட்டப்படவில்லை என்பதோடு , 2022 ஒக்தோம்பர் மாதத்திலிருந்து இது வரை உரிய காலப்பகுதிக்குள் மாவட்ட சுற்றாடல் மற்றும் வன பாதுகாப்பு குழு நடாத்தப்படுகிறது.

பண்டுக ஸ்ரீபிரபாத் அபேவர்தன,
மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்
மாவட்ட செயலகம்,
பதுளை.

Panduka Sri Prabhath Abeywardhana
District Secerary/Government Agent
Badulla.

எச்.எம். அனுஷா ஹேமமாலி மெனிகே,
பிரதான கணக்காளர் ,
மாவட்ட செயலகம்,
பதுளை.

H.M. ANUSHA HEMAMALI MANIKE
Chief Accountant
For Badulla District Secretariat

செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

Pradeep Yasarathna
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
(Home Affairs Division)
"NILA MEDURA" Elvitigala Mawatha, Colombo 05.

பிரதீப் யசரத்ன

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)

பிரதம அமைச்சர் மற்றும்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்